## ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடாவடி!

ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாட்டைத் ‘தமிழகம்’ என்று சொன்னதோ, ஆளுநர் உரையில் சில வார்த்தைகளைத் தவிர்ப்பதோ, அவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில், திருவள்ளுவருக்குக் காவிச்சாயம் பூசுவதோ தன்னிச்சையானது அல்ல. அது ஆர்.எஸ்.எஸ். மரபில் ஊறிப்போன ஒன்று.

ஹைதராபாத்தில் ‘லோகமந்தன்’ என்ற தலைப்பில், ஆர்.எஸ்.எஸ்., கருத்தரங்கம் ஒன்றை நடத்துகிறது. அந்தக் கருத்தரங்கிற்கான அழைப்பிதழ், சுவர் விளம்பரங்கள் அனைத்திலும் நிகழ்ச்சி நடைபெறும் இடம் ‘ஹைதராபாத்’ என்று குறிப்பிடப்படாமல், ‘பாக்யா நகர்’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ‘ஹைதராபாத்’ என்பது அரேபிய அடையாளம், அந்தப் பெயரை நீக்க வேண்டுமென்று பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ்.-ஸும் சில ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றன.

இப்போது அழைப்பிதழிலேயே ‘பாக்யா நகர்’ எனப் பெயரை மாற்றியிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். அதிகாரப்பூர்வமாக இப்போதும் ‘ஹைதராபாத்’ என்ற பெயர்தான் நீடிக்கிறது. அப்படியிருக்கையில், ‘அடாவடித்தனமாக ஆர்.எஸ்.எஸ். தன்னிச்சையாகப் பெயரை மாற்றியிருப்பது சட்டவிரோதமானது’ என எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன.

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு இன்று (நவம்பர் 22) கருத்தரங்கைத் தொடங்கிவைக்கிறார். ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கருத்தரங்கில் பங்கேற்கிறார். அரசியலமைப்புச் சட்டப்படி பொறுப்பேற்ற இவர்கள், சட்டத்திற்குப் புறம்பாக ஆர்.எஸ்.எஸ். பெயரை மாற்றியிருக்கும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளக்கூடாது என்றும் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்





ஆர்.எஸ்.பாரதி

### சட்டப்படிப்பு நிறைவும் தலைவரும்...

1976-ஆம் ஆண்டு, சென்னை சட்டக் கல்லூரியில் இளங்கலை சட்டப் படிப்பு (B.L) வெற்றிகரமாக நிறைவுபெற்றதை அடுத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்ற பொழுது எடுத்த படம். இந்தப் படத்தை எனது சமூக வலைதளப் பக்கத்தில் முகப்புப் படமாக வைத்திருப்பதில், பெருமை அடைகிறேன்.

– **ஆர்.எஸ்.பாரதி,**
**கழக அமைப்புச் செயலாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஜஸ்டிஸ் இதழும் சூழலும்!


1934-ஆம் ஆண்டு, மத்திய சட்டசபைத் தேர்தலில் நீதிக்கட்சி தோற்றதில் இருந்து, கட்சியின் உறுதித் தன்மை கேள்விக் குறியாக இருந்தது. நீதிக்கட்சியின் அதிகாரப்பூர்வ ஆங்கில ஏடான ‘ஜஸ்டிஸ்’ நிறுத்தப்பட்டது. ஆனால், சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை பார்ப்பனர் அல்லாதாரின் அரசியல் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றே வந்தன. ‘ஜஸ்டிஸ்’ நின்ற பின்னர், பொப்பிலி அரசர் சொந்தப் பொறுப்பில் ‘நியூ டைம்ஸ்’ எனும் ஆங்கில இதழை நடத்தினார்.

## சீரணி ⇒ இளைஞர் அணி

37

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**



# இளைஞர் படை... ஒரு கனவு... ஓர் உணர்வு!

ஓவியம் : ரவி பேலட்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1971-ஆம் ஆண்டு அறிவித்த இளைஞர் அணி, எப்படி அமைய வேண்டும், அதன் பணிகள் என்ன என்பவை குறித்து, பலருக்கும் பலவிதமான எண்ணங்கள் இருந்தன.

அப்படித்தான் அன்றைக்குத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் இயக்குநராக இருந்த எஸ்.சிங்கராசன் என்பவருக்கும் சில யோசனைகள் இருந்தன. அந்த யோசனைகளை ‘தமிழ் நாட்டில் இளைஞர் படை’ என்ற தலைப்பில் அக்டோபர் 1, 1971 -ஆம் தேதியிட்ட ‘தமிழரசு’ இதழில் கட்டுரையாக எழுதினார். அதிலிருந்து சில பகுதிகள்:

“14 வயது முதல் 22 வயது வரையிலும் கல்வி கற்று, வேலை வாய்ப்புகளை நாடும் தமிழ்நாட்டு இளைஞர்களான, ஆண்களும் பெண்களும் வேலை வாய்ப்புகளைப் பெறுவது வரை, தங்கள் பொன்னான நேரத்தை, வேலை வாய்ப்புகளை அறிவதிலும், பணியின் மூலம் தங்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, நாளை தேடிக்கொள்ளும் வேலைக்குத் தங்களை மேலும் உகந்தவர்களாக ஆக்கவும் இளைஞர் படை அமைப்பில், ஒரு சிறந்த வாய்ப்பு உள்ளது.

கல்வி கற்கும் வாய்ப்புகள் முடிவடைந்ததும், இன்று நம் இளைஞர்கள், தாங்களே வேலை வாய்ப்புகளைத் தேடி நடக்கும் ஓர் இக்கட்டான நிலை நாட்டில் உருவாகியுள்ளது. வேலைத் தகவல் நிலையங்கள், வேலையில்லாதவர் பெயரைப் பதிவு செய்து, வேலை வாய்ப்புகள் வரும்போது அவர்களுக்கு அறிவித்து, வேலை ஏற்பாடுகள் செய்ய உதவிய போதிலும், வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் இலட்சக்கணக்கில் கூடுவதன் காரணமாகவும், போதிய வேலை வாய்ப்புகள் அதிகரிக்காத காரணத்தாலும், இளைஞர்கள் வேலை இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

ஆனால், நாட்டில் நடக்கவேண்டிய வேலைகளோ ஏராளம்! ஏராளம்!! கட்டாயக் கல்வி, சுகாதாரம், சாலைகள் அமைப்பது, காடு வளர்த்தல், விவசாயிகளுக்கு உதவுதல், தொழில்நுட்பக் கல்வியில் மேலும் தேர்வு பெறுதல், சமுதாய நலன் கருதி ஆரம்பிக்கப் பட்டிருக்கும் எண்ணிறந்த நிறுவனங்களுக்குத் தொண்டு செய்வது போன்ற முற்போக்கு மனப்பான்மை ஓங்கி வளர்வதற்கு, இளைஞர்கள் முன்வர வேண்டும்” என எழுதினார்.

“ஒவ்வொரு இளைஞனும் தன் வருங்காலத்தையும், நாட்டின் எதிர்காலத்தையும் எண்ணி, குடும்பம், ஊர், ஊராட்சி, கோவில், அற நிலையம், மாவட்டம், பள்ளி, பாலர் அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள், ஓய்வு வேளையில் தொழில்களைக் கற்கும் நிலையங்கள், விவசாயப் பண்ணைகள், நூலகங்கள் போன்ற நிறுவனங்களில் தன்னைப் போன்ற இளைஞர்களுடன் சேர்ந்து, ஓய்வு வேளைகளில் சேவை செய்ய வேண்டும்’’ எனக் குறிப்பிட்டிருப்பார் சிங்கராசன்.

**சீரணிப் படையினரை வெற்றிகரமாக வழிநடத்தினார் கலைஞர். கழகத்தின் கிளை அமைப்புகளைப் போல, ஒவ்வொரு கிராம அளவிலும் சீரணிப் படையினர், இளைஞர் அணியைப் போல இயங்கினர்.**

அந்த இலக்கில் சீரணிப் படையினரை வெற்றிகரமாக வழிநடத்தினார் கலைஞர். கழகத்தின் கிளை அமைப்புகளைப் போல, ஒவ்வொரு கிராம அளவிலும் சீரணிப் படையினர், இளைஞர் அணியைப் போல இயங்கினர்.

“இளைஞர்களின் பள்ளிக் கல்வி அல்லது கல்லூரி வாழ்வு முடிந்ததும், தன் போன்ற நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து சமுதாய நலனை முக்கியமாகக் கருதி, சமுதாய அமைப்பில் தன் வருங்காலத்தை வளர்ச்சியடையச் செய்யவே இளைஞர் படை” என்று ‘தமிழரசு’ கட்டுரையில் சீரணிக்குக் கொடுக்கப்பட்ட விளக்கமே, இளைஞர் அணிக்கான விளக்கமாகவும் இருந்தது. இன்றும் இருக்கிறது.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

37

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

*கலைஞர் நூற்றாண்டையொட்டி பல திட்டங்களுக்கும், புதிய கட்டடங்களுக்கும் அவரது பெயரைச் சூட்டுவதை எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதுடன், ‘சொந்தக் கட்சி செலவில் இதைச் செய்யட்டும், இல்லையென்றால், இடிப்போம்’ என்று சிலர் கொக்கரிக்கிறார்களே?*




# பகைவரையும் பாராட்டிய பண்பாளர்!

உலகில் ஒவ்வொரு நாடும் தங்கள் மக்கள் நலனுக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவது வழக்கம். அமெரிக்காவின் தலைநகர் ‘வாஷிங்டன்’. அந்தப் பெயர், அந்நாட்டின் உரிமைக்காகப் போராடியவரும், முதல் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவருமான ‘ஜார்ஜ் வாஷிங்டன்’ பெயரில் அமைந்தது. அந்தந்த நாட்டுத் தலைவர்களின் பெயர்களில் விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் அமைந்திருப்பதையும் காணலாம். இவை எல்லாமே அரசு செலவில் கட்டப்பட்டவைதான். அதுபோல, நவீனத் தமிழ்நாட்டின் சிற்பியும், தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைக்கச் செய்தவரும், 80 ஆண்டு கால பொதுவாழ்வுக்குச் சொந்தக்காரருமான முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில், அவரது நினைவாக மக்கள் பயன்பாட்டுக்குரிய மருத்துவமனை, நூலகம், பேருந்து முனையம் போன்றவற்றிற்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

5 முறை முதல்வராகப் பொறுப்பேற்று, தமிழ்நாட்டை அதிக காலம் ஆட்சி செய்த பெருமைக்குரிய கலைஞர், தனது ஆட்சிக்காலத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் சிதைக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைச் சீரமைத்துக் கட்டியதில் தொடங்கி, விடுதலைப் போராட்ட வீரர்கள், அதில் ஈடுபட்ட காங்கிரஸ் தலைவர்கள் எனப் பலருக்கும் நினைவுச் சின்னங்கள் அமைத்தவர். அரசியலில் எதிர்நிலையில் இருந்த போதும் ‘மூதறிஞர்’ ராஜாஜி, ‘பெருந்தலைவர்’ காமராஜர் உள்ளிட்ட தலைவர்களின் பொதுத்தொண்டினை மதித்து, அவர்களுக்கும் நினைவிடங்களை அமைத்தவர் கலைஞர்தான். ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சி.க்கு சிலை, கவியரசு கண்ணதாசனுக்கு மணிமண்டபம், எம்.ஜி.ஆர். பெயரில் ‘மருத்துவப் பல்கலைக் கழகம்’- ‘திரைப்பட நகரம்’ எனப் பாரபட்சமின்றி தமிழ்நாட்டுத் தலைவர்கள்-தமிழறிஞர்கள் ஆகியோருக்கான நினைவுச் சின்னங்களை அமைத்தார்.

அண்ணல் அம்பேத்கர் பெயரைச் சட்டப் பல்கலைக்கழகம், மாவட்டம் ஆகியவற்றுக்குச் சூட்டி அவருக்கு மணிமண்டபமும் அமைத்தவர் கலைஞர். இவையெல்லாமும் அரசுப் பணத்தில் செலவிடப்பட்டதுதான். ஜெயலலிதா தன்னுடைய பெயரையே வைத்து, அரசுப் பணத்தில் சூட்டிக்கொண்ட திட்டங்களும் கட்டடங்களும் உண்டு. அப்போது வாயில் கொழுக்கட்டையை வைத்திருந்த ‘தொடை நடுங்கிகள்’ இப்போது கலைஞர் பெயரை வைத்ததும் கொக்கரிக்கிறார்கள் என்றால், அவர்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ளது வன்மம் தவிர, வேறல்ல. ‘இடிப்போம்’ என்பவர்களின் ‘கைகளை ஒடிப்போம்’ என்று சொல்ல அதிக நேரமாகாது. ஆனால், பகைவருக்கும் அருளிய கலைஞர் அப்படிக் கற்றுத் தரவில்லை.


**‘இடிப்போம்’ என்பவர்களின் ‘கைகளை ஒடிப்போம்’ என்று சொல்ல அதிக நேரமாகாது. ஆனால், பகைவருக்கும் அருளிய கலைஞர் அப்படிக் கற்றுத் தர வில்லை.**

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

667

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131